தனிப்பிரதி - ரூ. 20/-    ஆண்டு சந்தா- ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

ஜூலை 2023    மலர் 2 இதழ் 15    இனிக்கும் இலக்கிய இதழ்



## கவிஞர் கபிலன் மகள் ஏற்படுத்திய தாக்கம்

## தாழையார் குறித்தச் சிறப்புக் கட்டுரை

# மௌன மொழி



**தமிழ்மாமணி முனைவர்**

**தாழை இரா.உதயநேசன்**

மௌனம் என்னை
மென்மையாய் ஈர்க்க

ஆயுதம் ஏந்தித்
தொடுக்கிறாய் நெஞ்சில்

விழியின் சலனம்
சல்லடை ஆகி

மனதின் ஓரம்
துளைப்பதும் ஏனோ?

காதலின் மொழியும்
மௌனம் ஆனால்

வீழ்த்தும் விதமும்
எதுவென அறியேன்

விளம்பிட வார்த்தைகள்
ஆயிரம் இருந்தும்

மௌனித்து நிற்கிறேன்
மௌனமே வழிவிடு

// முத்தமிழ் நேசன்

இனிக்கும் இலக்கிய இதழ்

ஜூலை 2023 மலர் 2 இதழ் 15

**நிறுவனர்**

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

பாரதி சந்திரன்

**ஆசிரியர் குழு**

ஜோ. சம்பத்குமார்

மு. தனஞ்செழியன்

எ.பாவலன்

த. பரிமளா

**கௌரவ ஆலோசகர்:**

கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை

**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்

எண்:10, முதல் தெரு,ஶ்ரீராமபுரம்

ஆம்பூர் – 635 802

திருப்பத்தூர் மாவட்டம்

## பொருளடக்கம்

**சிறுகதை**

க.வீரமணி

**ஹைக்கூ**

செல்லம்பாலா

பிரியா ஜெயகாந்த்

ஜலீலா முஸம்மில்

**இன்றிரவு துயர்மிகு வரிகளை எழுதக்கூடும்.**

முனைவர் எ. பாவலன்

**கவிதைகள்**

ஆதி தற்பரானந்தன்

வேல்கவி பாலா மாஸ்டர்

இரட்டைக்கரடு மு.இளங்கோவன்

டாக்டர் ராமா வைத்தி

கவிஜி

சு.அமுதமணி கல்யாணசுந்தரம்,

பானுமதி இராஜேந்திரன்

கவிஞர் இராசு மணி

மு. மங்கையர்க்கரசி

க.தமிழ்ச்செல்வன்

ரேணு பாலு

ஷாமினி தவசீலன்

கலாமலர் கதிர்காமநாதன்

**கவிஞர் தாழையாரின் கவிதைகளும் உலகக் கவிஞர்களும்**

பேராசிரியர் மு விஜயகுமார்

**சீவக சிந்தாமணியில் சைவம்**

முனைவர் ஜா.திரிபுர சூடாமணி

**உலகத் தமிழ் மாநாடு 2023**

இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,
யுனிகோட் ( unicode ) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

mutamilnesan2022@gmail.com

## தலையங்கம்

# நேசம் மிக்க வணக்கம்.

தமிழ் இலக்கியவெளியில் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய எழுத்தாளர்களுள் ஒருவர், ஆரூர் தமிழ்நாடன் ஐயா அவர்கள். மோகன் எனும் இயற்பெயர் கொண்டமையால், தமிழின் மீது அளவற்ற மோகம் உள்ளவர். எண்ணற்ற இலக்கியச் சாதனைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர். பெரியார் விருது, கவிக்கோ விருது, கவிமாமணி, கவிப்புயல், கவிஅருவி, பாவேந்தர் பட்டயம் ஆகிய விருதுகளையும் பெற்ற விருத்தாளர்.

'காலநதி' என்னும் அவரது நூல், 'மிகைல் நைமியின்' 'மிர்த்தாத்தின் புத்தகத்தின் தேடலைப் போன்றது. காலத்தால் அற்புதமான பொக்கிஷமாகத் திகழ்கின்ற நூல். வலிமையான வார்த்தைகளின் பயன்பாட்டால் கவிதையானாலும், கட்டுரையானாலும் அனைத்து வாசகர்களையும் வசியப்படுத்தும் ஆற்றல் கொண்டவர். அத்தகு சிறப்புமிக்க ஆரூர் தமிழ்நாடன்ஐயாஅவர்களுக்குக்கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் வெற்றித் தமிழர் பேரவை வழங்கும் "கவிஞர்கள் திருநாள் விருது வழங்கப்படவுள்ளது.

தமிழகத்தில் மட்டுமல்லாது பிற இடங்களிலும் பெரிதும் கவித்துவத்தால் விரும்பப்படும் கவிஞரான ஆரூர் தமிழ்நாடன் ஐயாவிற்கு முத்தமிழ் நேசனின் வாழ்த்துக்கள். இன்னும் பிரகாசமான ஒளி உங்கள் நூல்களின் மேல்படும். காலநதியால் பூக்க போகும் அதிசயப் பூக்களின் பிதாமகராகத் தாங்கள் எங்கும் இருப்பீர்கள்.

பால சாகித்திய புரஸ்கார் விருது பெறும் எழுத்தாளர் உதயசங்கர், யுவ புரஸ்கார் விருது பெறும் எழுத்தாளர் ராம்தங்கம் ஆகியோர்களின் இலக்கியப் பணி மிகச் சிறப்பானது. விருதுபெறும் இருவருக்கும் முத்தமிழ்நேசன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

உங்களிடமிருந்து படைப்புக்களை இன்னும் அதிகமாக நாங்கள் எதிர்பார்க்கின்றோம். படைப்புக்களோடு சேர்த்துச் சந்தாவையும் இணைத்து அனுப்புங்கள். தொடர்ந்து பயணிப்போம்.



நேசமுடன்,

**பாரதிசந்திரன்**

( இதழுக்குச் சந்தா கட்ட விரும்பும் வாசகர்கள் சந்தா தொகையை Google pay வழியாகச் செலுத்தலாம். Google pay No : 9159698466. சந்தா கட்டிய பின் தங்கள் முகவரியை இந்த எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் தெரியப்படுத்துங்கள். இதழின் வளர்ச்சிக்கும், தமிழின் வளர்ச்சிக்கும் சந்தாக் கட்டத் தாமதிக்காதீர்கள். அச்சுப் பதிப்பாகவும், மின்இதழாகவும், உங்கள் படைப்புகளை உலகம் முழுவதுமிருக்கும் இலக்கிய வாசகர்கள் இவ்விதழ் மூலம் படிக்கின்றனர். எனவே, தொடர்ந்து எழுதவும் செய்யுங்கள்)

## வறுமையும் வலிமையும்

ஓலை குடிசைகள் ஒழுகும் மழைத்துளி
நிலவின் கருணை ஒளிரும்
விளக்கு

ஒட்டிய உடலோடு உலவும் குழந்தைகள்
கண்கள் குழிகளில் விழுந்து
கிடக்கும்

இத்தனைக்கும் நடுவே முன்னேறும் துடிப்பில்
முயலும் ஏழைகள் இதயம்
மட்டும்

முடியும் என்று அடித்துக்
கொள்ளும்
உடலும் உள்ளமும் வலிமையில் மிளிரும்.

**ஜெயகுமாரி கந்தவேள்**

## ஊர்வலம் செல்லவே உள்ளம் ஏங்குதே

ஊர்வலம் செல்லவே..
உள்ளம் ஏங்குதே

போரினில் வெல்லவே
வீரியம் வேண்டுமே

காற்றினில் உலவியே
காதலில் பழகியே

உள்ளத்தில் உயர்ந்திடவே
வெள்ளத்தில் மிதந்திடவே

காதலிளம் சோடிகளே
பாதைமாறி போகாதீரே

ஊர்வலம் செல்லவே
ஆர்வமே உள்ளதே

குடும்பமாய் குதூகலம்
படும்பாடு பெரும்பாடு

எண்ணத்தில் களிப்பதே
விண்ணதை நோக்கியே

ஓடுங்கள் இன்பமுற
தேடுங்கள் அன்புயர

ஓடுங்கள் ஊர்வலமாய்
பாடுங்கள் பேர்புகளாய்

**வேல்கவி பாலா மாஸ்டர்**

**வேலணை லண்டன்**

சிறுகதை

# பாவிமனம் தூங்கலையே



திருச்சியைப் பூர்விமாகக் கொண்ட ரத்தன் இரும்பு வியாபாரத்தின் முடிசூடா மன்னன் இவரது வியாபாரம் உலகம் முழுவதும் பரவிக் கிடக்கிறது.. தலைமையகம் ஜெர்மனியில் இயங்குகிறது. கொஞ்சம் கொஞ்சமாக உழைத்து முன்னேறி இந்த இடத்தைப் பிடித்துள்ளார்..

கடந்த இரண்டு மாதங்களாக ரத்தன் முதலமைச்சர் வைத்தியம் பார்த்துக்கொண்ட சென்னையின் மிகப்பெரிய ஹாஸ்பிட்டலில் அட்மிட் ஆகி படுத்துக் கிடக்கிறார்.

ஆறடி உயரம் கொண்ட வெள்ளை வெளேர் சிலை போல் ஆஸ்பத்திரி படுக்கையில் மின்னுகிற ரத்தனுக்கு ஏகப்பட்ட உள் வியாதிகள். ஓயாத தொடர் விமான பயணங்கள், வெளிநாட்டு மது, உணவு வகைகள், வியாபார அரசியல் நெருக்கடிகள் என இந்த 65 வயது ஜாம்பவானை இப்படி சாய்த்திருக்கிறது மனைவி இறந்து 5 வருடங்கள் ஆகிவிட்டது ஒரே மகன் மனோஜ் ரத்தன் ஜெர்மனியில் இருந்து மொத்த உலக வியாபாரத்தையம் கவனித்துக் கொள்கிறார்.

எம்டி உள்பட ரத்தனின் சென்னை அலுவலக ஊழியர்களும், தூரத்து சொந்த பந்தங்களும் ஆஸ்பத்திரி வளாகத்தில் தவம் கிடக்கிறார்கள்..

மகன் ஜெர்மனியில் இருந்து உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டே இருக்கிறான்.. அமெரிக்க – இந்திய டாக்டர்களைக் கொண்ட ஒரு குழு ரத்தனின் உடல் நிலையை வினாடிக்கு ஒரு முறை கவனித்துக் கொண்டிருக்கிறது... வீடியோ கான்பரென்சில் அமெரிக்க தலைமை டாக்டரிடம் விவாதித்த பின்பே ஒவ்வொரு மருந்தும் ரத்தனுக்கு அளிக்கப்படுகிறது.

முதுகு தண்டுவடத்தில் படர்ந்த கேன்சர் பல பரிமாணங்களில் ரத்தனை வாட்டி வதைக்கிறது, கிட்னி இதயம் லிவர் என்று எல்லா உறுப்புகளும் ஒத்துழைக்க மறுக்கிறது..

அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் வந்து ரத்தனை பார்த்து விட்டுப் போகிறார்கள் வெளியே மீடியா காத்து கிடக்கிறது..

முதலமைச்சருக்கு வைத்தியம் பார்த்த குழுவில் இருந்த தலைமை செவிலி சுகன்யாவை கடந்த இரண்டு மாத காலமாக மருத்துவமனை நிர்வாகம் ரத்தனுக்காக ஒதுக்கி உள்ளது 35 வயதான சுகன்யா அப்பா, அம்மா, தம்பி இவர்களுடன் ஒரு வாடகை வீட்டில் வசித்து வரும் நடுத்தர வர்க்கத்தின் பெண். இருப்பினும் பெரிய மனிதர்களின் வைத்திய முறையில் நிதானமாக செயல்படும் 15 வருட அனுபவம் உள்ளவர் , தலைமை மருத்துவரே சுகன்யாவைக் கலந்து ஆலோசிக்கும் அள்வுக்குப் பிரபலம் .

ரத்தன் உலக மகா கோடீஸ்வரர் என்றாலும் இந்த இரண்டு மாத காலமாக அவரை உள்ளார்ந்த தனிமையும் வெறுமையும் வாட்டி எடுக்கிறது.. மருத்துவர்களும் உபகரணங்களும் வியாதிக்கு உதவியாக இருக்கின்றது. தனிமையில் தவிக்கும், அறற்றும் மனதுக்கு எந்த ஆறுதலும் இல்லை. இரவு முழுதும் உறக்கமின்றி மருத்துவ உபகரணங்கள் நடுவில் தவிக்கும் ரத்தனுக்கு இருக்கும் ஒரே மனித ஆறுதல் சுகன்யா தான்.. . சுகன்யாவிடம் கொஞ்சம் கொஞ்சமாகப் பேசத் துவங்குகிறார்

தன் 65 ஆண்டு கால அனுபவங்களைச் சொல்வதும் அவளை பற்றிக் கேட்பதும் ரத்தனுக்கு ரொம்ப பிடித்திருந்தது ஆனால் சிகிச்சை சம்பந்தமாகத் தவிர வேறு ஏதும் நோயாளியிடம் பேசக்கூடாது என்ற விதி இருப்பதால் சுகன்யா தயங்கி தயங்கி மருத்துவமனை நிர்வாகத்திற்கு பயந்து பயந்து ரத்தனிடம் பேசினாள்

ரத்தனுக்கு சுகன்யாவை ரொம்ப பிடித்து விட்டது, அவள் மீது ஒரு பெரும் வாஞ்சை பெருக்கெடுத்தது, ஒரு நாள் லீவு எடுத்தாலும் சுகன்யாவை ரத்தன் தேட ஆரம்பித்து விடுவார். சாகப்போற கிழவன் செய்யிற சேட்டையைப் பாரு என்று சக செவிலியர்கள் கிண்டலடித்துக் கொண்டிருந்தார்கள் .

ஆனால் சுகன்யா வலுவான உளவியல் கொண்டவள், இது போல் எத்தனையோ நோயாளிகளைப் பார்த்திருக்கிறாள், முதலமைச்சரிடமே நல்ல பெயர் வாங்கியது, முதலமைச்சர் உனக்கு என்ன வேணும் என்று கேட்ட போது எதுவும் வேண்டாம் என்று மறுத்து வெளியேறிய சிங்கம். சுகன்யாவை மருத்துவமனை நிர்வாகம் நன்கு அறியும்.

நாட்கள் கடந்து கொண்டே போகிறது. பல மருந்துகளைப் பரிந்துரைத்துப் பார்க்கிறார்கள் ரத்தன் உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

ரத்தனுக்கு இரவு உறக்கம் வருவதில்லை பகலில் சிறிது நேரம் உறங்குகிறார் . ஒருநாள் சுகன்யாவிடம் உனக்குத் தூக்கம் வரவில்லை என்றால் என்ன செய்வாய் என்று ரத்தன் கேட்க நான் மொபைலில் பாட்டு கேட்பேன் தூங்கி விடுவேன் அய்யா என்கிறாள்

எங்கே நானும் கேட்கிறேன் என்று அவள் வைத்திருக்கும் ஒரு சாதாரண ஹெட் செட்டை வாங்கி ரத்தன் பாட்டு கேட்கிறார்

ஊரு சனம் தூங்கிடுச்சி .. ஊத காத்தும் அடிச்சிடுச்சி.. பாவி மனம் தூங்கலையே ஜானகியின் குரல் ரத்தனை உருக்கிக் கரைத்து உறங்க வைத்து விடுகிறது. எல்லோருக்கும் ஒரே ஆச்சர்யம்.

அதுபோல் ஒரு நாள் ரத்தனுக்கு தீரா தலைவலி, அமெரிக்க டாக்டர்கள் கூடி பேசி

ஏதேதோ மருந்தைப் பரிந்துரைத்தார்கள், தலைவலி நின்றபாடில்லை

நள்ளிரவில் யாருக்கும் தெரியாமல் தன் கைப்பையில் இருந்த டோலோ 650 மாத்திரை ஒன்றை சுகன்யா தருகிறாள். தலைவலி பறந்தோடுகிறது. ரத்தன் சுகன்யாவின் கையைப் பிடித்து நமஸ்கரிக்கிறார் .

சில சமயம் ஐந்து நட்சத்திர ஹோட்டல் உணவும், ஹாஸ்பிட்டல் உணவும் பிடிக்காமல் போய், சுகன்யா கொண்டு வரும் ரசம் சாதம் அவருக்குத் தேவாமிர்தமாகி விடுகிறது. மொத்த டிபன் பாக்ஸையும் காலி செய்து விடுகிறார்.

பதவியிலும் பணத்திலும் புரண்ட ரத்தன் சுகன்யாவின் எளிமைக்கும் அன்புக்கும் அடிமையாகி விட்டார். சுகன்யா எப்போதும் கூடவே இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்.

சுகன்யாவிற்கும் ரத்தனை ரொம்ப பிடித்து விட்டது. அவள் நிறைய நோயாளிகளை இது போல் தன் அன்பால் ஆசுவாசப்படுத்தி இருக்கிறாள். ரத்தனிடம் மட்டும் அவளுக்கு ஏதோ மன ரீதியான நெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. அய்யா என்று அழைப்பதை விட்டு அப்பா என்று அழைக்கலானாள்.

தன் மீது எப்போதும் ஹாஸ்பிட்டல் மருந்து வாடை அடிப்பதாகவும், நான் நோயாளிகளின் வாந்தி, மலம் அள்ளுவதாகவும், வேலையை, குடும்பத்தை விட்டு வர வில்லை என்று தன் கணவன் தன்னை விவாகரத்து செய்த, தான் ஜீவனாம்சம் கூட வேண்டாம் என்று ஒதுங்கிய, யாரிடமும் அதிகம் பகிராத தன்கதையை முறிந்து போன திருமண வாழ்வை ரத்தனிடம் சொல்ல அவன் அவள் தலையில் கை வைத்து, உன்னைப் புரிந்து கொண்ட ஒருவன் உனக்குக் கிடைப்பான் என்று சொல்லி ஆசீர்வாதம் செய்தது எல்லாம் சுகன்யாவிற்கு பெரும் ஆறுதலை தந்தது .

ரத்தனுக்கும் சுகன்யாவுக்கும் உள்ள நெருக்கம் ரத்தனின் அலுவலக மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் மத்தியில் வெவ்வேறு யூகங்களை ஏற்படுத்தியிருந்தது .ரத்தனின் ஊழியர்கள் எல்லாம் சுகன்யாவுக்கு சல்யூட் அடிக்க ஆரம்பித்தார்கள்.

சுகன்யாவிற்கு சந்தோஷமும் பயமுமாய் வாழ்வு நகர்ந்தது .

ஆனால் காலம் மிகக் கொடூரமானது. ஒருநாள் காலை 10 மணிக்கு அனைத்து உறுப்புகளும் செயலிழக்க ஹார்ட் அட்டாக்கில் ரத்தன் இறந்து போனார் சுகன்யா வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

மதியமாக எழுந்து பார்த்த சுகன்யாவுக்கு ஏராளமான மிஸ் கால்கள், ஹாஸ்பிட்டலில் இருந்து தோழி ஒருத்தி உன் ஆளு போயிட்டாரு டி என்று மெசேஜ் அனுப்பி இருந்தாள் டி.வியில் ரத்தனின் மரணச் செய்தி லைவாக போய்க் கொண்டிருந்தது. சுகன்யாவுக்கு அடிவயிற்றிலிருந்து ஒரு குமுறல் கிளம்பியது. ஆட்டோ பிடித்து மருத்துவமனைக்கு ஓடினாள், இவள் போகும் முன்பே ரத்தனை அங்கிருந்து எடுத்துச் சென்று இருந்தார்கள்..

ஒரு வாரம் கழித்து ரத்தனின் மகன் மனோஜ் ரத்தன் சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் சுகன்யாவை

சந்திக்க விரும்புவதாகச் சொல்லி மருத்துவமனை நிர்வாகம் அவளை அனுப்பி வைத்தது .

உங்களைப் பற்றி அப்பா போனில் நிறைய சொல்லி இருக்கிறார். உங்களுக்காக என் அப்பா ஒரு வீடு வாங்கித் தரச் சொல்லி இருக்கிறார், வீட்டை வாங்கி அதற்கான பத்திரம் சாவி எல்லாம் ரெடியாக இருக்கிறது நீங்கள் உடனே . எடுத்துக் கொள்ளலாம், உங்கள் தம்பிக்குப் படித்து முடித்தவுடன் எங்கள் கம்பெனியில் உயரிய பொறுப்பு வழங்கப்படும். நீங்கள் செவிலியர் பணியை விட்டுவிட்டு வர மாட்டீர்கள் என்று என் அப்பா சொல்லி இருக்கிறார் அப்படி நீங்கள் வர நினைத்தால் எங்கள் நிர்வாகத்தின் முதன்மை அதிகாரியாக நீங்கள் பணிபுரியலாம். இதை எதையுமே மறுத்து விடாதீர்கள் இது எல்லாம் என் தந்தையின் கடைசி ஆசை என்று மனோஜ் ரத்தன் சொல்லச் சொல்ல சுகன்யா உடைந்து அழ ஆரம்பித்தாள் . யாராலும் அவள் அழுகையை நிறுத்தவே முடியவில்லை.

வீடோ, தனக்கு பதவியோ கட்டாயம் வேண்டாம் என்று மறுத்து விட்டாள். முடிந்தால் தம்பிக்குத் தகுதிக்கு ஏற்றவாறு ஒரு வேலையைத் தாருங்கள் என்று கூறி அவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் கேட்கமால் அங்கிருந்து கிளம்பி வந்து விட்டாள் .

காலங்கள் உருண்டோடி விட்டது சுகன்யா பெற்றோர்கள் வற்புறுத்தியும் வேறு திருமணம் ஏதும் செய்து கொள்ளவில்லை, 45 வயதாகிவிட்டது, தலை முழுதும் நறைக்கொடிகள். இப்போது அதே மருத்துவமனையில் சுப்பிரண்டெண்ட் ஆகிவிட்டாள்

சுகன்யாவுக்காக வாங்கிய வீட்டை அவள் இதுவரை ஏற்கவும் இல்லை, ரத்தன் வீட்டார் அந்த வீட்டைத் திருப்பி எடுத்துக் கொள்ளவும் இல்லை. வெறுமனே பூட்டிக் கிடக்கிறது சென்னையின் மையப்பகுதியில் இருக்கும் அந்த வீட்டின் தற்போதைய மதிப்பு சுமார் 30 கோடி என்று சொல்கிறார்கள்.

சுகன்யா தன்னுடைய ஹேண்ட் பேக்கில் ரத்தன் பாட்டு கேட்ட அந்தப் பழைய ஹெட் செட்டை பத்திர படுத்தி வைத்திருக்கிறாள், எப்போதும் அவள் பையில் டோலோ 650 மாத்திரைகள் இருக்கிறது' வீட்டிலிருந்து எப்போதாவது ரசம் சாதம் கொண்டு வந்தால் அதை யாருக்கேனும் கொடுத்துவிட்டு கேண்டீனில் சாப்பிடுகிறாள்.

யாராவது ரத்தனை பற்றி அவளிடம் பேசினால் நீண்ட மௌனத்தில் போய் விடுகிறாள்.



***க. வீரமணி***
*சென்னை*



## ஹைக்கூ

என் கைகளில்
ஏறி நழுவுகிறது
ஆற்று மீன்
..
மாலைப்பொழுது...
கடற்கரை ஓரம்
அலைகள் மட்டும்
...
நொடிப்பொழுது
உணர்ச்சியின் வசப்படல்
சிறைவாசி
....
சொல்வதைச் செய்கிறேன்
தருவதைத் தின்கிறேன்
சோதிடன் கிளி
....
ஒரு மரணம்
ஊர் கூடிப்
பேசுகிறது.

**– செல்லம்பாலா,**
**சென்னை.**

## தயக்கம் தவிர்

பள்ளிப் பருவத்தில்
பாடத்தில்
சந்தேகம் கேட்கத் தயங்கினேன்

தெருவில் பிள்ளைகளுடன்
சேர்ந்து
விளையாடத் தயங்கினேன்

அண்ணனின் சட்டையை
அணிந்து
வெளியில் வரத் தயங்கினேன்

மொட்டை மாடியில்
பட்டம்
விடத் தயங்கினேன்

தோழியுடன் வெளியில்
தனித்து
செல்லத் தயங்கினேன்

வளரும் பருவத்தில்
வாய்விட்டு
சிரிப்பதற்குத் தயங்கினேன்

விரும்பிய பிரிவில்
கல்வி கற்க
விண்ணப்பிக்கத் தயங்கினேன்

தம்பியைப் போல்
புத்தாடை வேண்டுமென
கேட்கத் தயங்கினேன்

மனம் கவர்ந்த ஆணிடம்
காதலை
சொல்லத் தயங்கினேன்
திருமணத்தின் போது
வரதட்சனை கொடுக்காமல்
மறுக்கத்  தயங்கினேன்

மாமியார் முன்
பிடித்த உணவை
புசிக்கத் தயங்கினேன்

மாமனாரின் எதிரில்
சமமாக
அமரத்  தயங்கினேன்

உடல் சோர்விலும்
கனவருக்கு முன்னர்
உறங்கத்  தயங்கினேன்

பிடித்த பாடலை
உறவினர் எதிரில்
பாடத்  தயங்கினேன்

தயங்கித்  தயங்கி
என்
வாழ்நாள் கடந்துவிட்டேன்

இனி என் மகள்
தயக்கமின்றி வாழ
அறிவுறுத்தத்  தயங்கமாட்டேன்.

**பிரியா ஜெயகாந்த்**,
**சென்னை**

# பிரிவெனும் முள்

கடலும் கரையும் காதல் சொல்லும்
அலைகளில் நினைவுகள் அசைந்தே கொல்லும்.

நினைவின் சுவடுகள் நெருஞ்சியாகும் வடுக்கள்/
நெஞ்சத்தில் படியுதே பிரிவின் முட்கள்
நேசம் கொண்டேன் ஆசை வைத்தேன்
நிசமாய் வாழக் கனவுகள் கண்டேன்.

பிரிவைத் தந்து பேதையைக் கொன்றாய்
பாசத்தின் தேடல்களில் பாதியாய்க் குறைந்தாய்

அமைதியாய் இதயம் அழுகிறதே நாளும்
ஆதவனை விலகித் தவிக்குதே வானம்

அகலாத அகலாய் ஆனாய் எனக்குள்
ஆனாலும் மறைந்தாய் கானல் நீராய்



**Dr.ஜலீலா முஸம்மில்,**
**ஏறாவூர், இலங்கை**



# இன்றிரவு துயர்மிகு வரிகளை எழுதக்கூடும்.

**( கவிஞர் கபிலன் எழுதிய, “மகள்” நூலை முன் வைத்து )**

எந்தப் புள்ளியிலிருந்து தொடங்குவது? ஆய்வுக் கட்டுரையோ?, நூல் விமர்சனமோ?, கவிதையோ? எதுவாகிலும் இருந்தாலும் அதற்கு இயல்பாகவே ஒரு நல்ல சொல் கிடைத்துவிடும். இல்லை என்றால் சில நேரத்தில் எப்படியாவது ஒரு நல்ல சொல்லைக் கண்டைந்துவிட முடியும். திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் கபிலன் எழுதிய மகள் என்னும் கவிதையைப் படித்தவுடன், எதையும் சொல்லத் தோன்றவில்லை. ‘இன்று இரவு என்னால் துயர்மிகு வரிகளை எழுதக்கூடும்’ என்ற பாப்புலோ நெருடாவின் கவிதை வரிதான் என்னைச் சிந்தனையில் ஆழ்த்தியது.

அன்பு என்ற ஒற்றைச் சொல்லுக்குள் இந்த அகிலமே அடங்கியிருக்கிறது. உயிர்களிடத்தில் அன்பு வேண்டுமென்றான் பாரதி. உன்னிடத்தில் அன்பு கூறுவதைப் போலப் பிறரிடத்தில் அன்பு கூறுவாயாக என்கிறது பைபிள். இந்த அன்பு எங்கு பார்க்க முடியும் என்றால்? முற்றும் முழுவதுமாகத் தன் பிள்ளைகளிடம் காண முடியும்.

இந்த 21ம் நூற்றாண்டில் மகளைப் பற்றிக் கேட்ட ஒரு நல்ல சொல் நா. முத்துக்குமாரின் மகளைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டும் தான் தெரியும் முத்தம் காமத்தில் சேராது என்று. இது ஆகச்சிறந்த சொல்.

சமீப காலமாகக் கவிஞர் கபிலனின் மகள் ஏற்படுத்திய தாக்கம் அவரால் மட்டுமல்ல வாசகர் ஒவ்வொருவராலும் அந்தக் கவிதையிலிருந்து வெளிவர

முடியாத அளவிற்கு பெரும் தாக்கத்தையும், வலியையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அவருடைய மகள் தூரிகையின் மரணம் நிலைகுலைய செய்து விட்டது. அது எத்தனை பெரிய வலி. உலகில் மிகப்பெரிய கொடுமை என்னவென்றால் அப்பாக்கள் தன் பிள்ளைகளுக்குச் சொல்லி வைப்பது தான்.



*கவிஞர் கபிலன்*

நீண்ட நெடுங்காலமாக எல்லாப் பெற்றோர்களும் தன் பிள்ளைகளிடம் உறவாடும் போது அழுத்தமாக அவர்களிடம் பின்வருமாறு கூறுகிறார்கள். நான் செத்துப் போயிட்டா உலகத்திலே எந்த மூலையில் இருந்தாலும் நீ தான் வந்து எனக்குக் கொல்லி வைக்கனும். எறவக்கொல்லி அப்பா – அம்மாவுக்கும் ஆகாது. அதே போன்று மகளிடம் கூடக் கல்யாணமாகி புகுந்த வீட்டுக்குப் போனாலும் எங்களுடைய சாவு செய்தியைக் கேட்டால் எந்த மூலையில் இருந்தாலும் வந்துடனும். இது ஒரு வகையான உளவியல்.

இந்தச் சூழலில் தனக்கு முன்னால் தன்னுடைய பிள்ளை இறந்து, அதற்குக் கொல்லி
வை க் கு ம்
கொ டு மை
யாருக்கும் வரக்கூடாது. அதனுடையவலியும்வேதனையும் சொல்லொணா துயரத்தை ஏற்படுத்தும். இதற்கிடையில் தான் கவிஞர் கபிலனின் திருமண வயதுடைய மகள் தூரிகை இறந்து விடுகிறார். தூரிகையை நினைத்து நினைத்து அழுதழுது தன் ஆற்றமையையும், தாலாட்டு எல்லாவற்றையும் கவிதையில் வடித்து ஒப்பாரியாக வெளிப்படுத்தியுள்ளார்.

மனைவி
இறக்கி வைத்ததிலிருந்து நானே
சுமந்து கொண்டுருந்தேன் கடைசியாய்
சுமந்த தீச்சட்டி வரை. (ப. 73).

இந்த ஒற்றைக் கவிதையே அவருடைய வலியையும், வேதனையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

எல்லாத் துளிகளையும் சிந்திய பிறகு
என் கண்களில்
தேங்கி நிற்கின்றன
அவள் உருவில்
ஒரு
கண்ணீர் சிற்பம் (ப.9)

இந்த வரிகள் கவிதைக்கான மொழியாடல் என்பதைத் தாண்டி அவருடைய கண்ணீர் எழுத்துக்களின் வழியே வடிந்து ஒழுகுவதை காண முடிகிறது.

குழந்தையாக
அவளைப்
பள்ளிக்குத் தூக்கிச் சென்ற
பாரம்
இன்னும் வலிக்கிறது (ப.13)

இமைகளைத்
துண்டித்துக் கொண்டு போவதற்கா
தூரிகை என்று
பெயர் வைத்தேன் (ப.35).

கொரியர் இளைஞனிடம்
உனக்காக
கையொப்பமிட்டுருக்கிறேன்
கடைசியில்
உன்னையே
கையொப்பமிட்டுதான்
வாங்கினேன் (ப.41)

இப்படி எல்லா கவிதைகளும் பக்கத்துக்குப் பக்கம் தன் மகளின் இறப்பை எண்ணி மெழுகாய் உருகுவதைக் காணமுடிகிறது. எதிரிக்குக்கூட இது போன்ற துன்பம் வந்து விடக்கூடாது என்று நினைக்கத் தோன்றுகிறது. மனக்கோளத்தில் பார்க்க வேண்டிய மகளை மரண கோலத்தில் பார்ப்பது எந்த அப்பாவால் தான் தாங்க முடியும். இன்னும் கூடுதலாகத் தன் மகளின் மரணத்தை இப்படிப் பதிவு செய்கிறார்.

அவளை
மின்தகனத்திற்கு அனுப்பவில்லை
ஒரு
பட்டாம்பூச்சி
தீக்குளிப்பதை
கவிஞனால்
தாங்க முடியாது (ப. 109).

பிள்ளைகள் கீழே விழுந்து அடிபட்டாலே ஏற்க மறுக்க மனம் பூவுடல் முழுவதும் தீப்பாய்வதை ஏற்க மறுப்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

இறுதியாக எல்லோரும் இறப்பது உறுதி. அதற்கென்று காலமும் நேரமும் உண்டு. ஆனால் தனக்கு முன்னால் தன் மகளைப் பறிகொடுப்பது எந்தப் பெற்றோராலும் ஏற்க முடியாது. வாழ்க்கை வலி நிறைந்தது தான். புத்தர் துக்கம் என்ற ஒரு சொல்லில் எல்லாவற்றையும் அடக்கி விடுகிறார். மரணம் இல்லாத எந்த ஒரு வீடும் இல்லை. ஆனால் கவிஞர் கபிலன் தன் மகள் தூரிகையைக் கவிதைகளில் என்றென்றும் வாழவைத்துள்ளார்.



**முனைவர் எ. பாவலன்**

காலம் மாறிப்போச்சு
கடிதங்கள்
கை மாறியக்
காலங்களில்
ஆயிரம் மைல்களுக்கு
அப்பாலிருந்தாலும்
பற்றோடிருந்த
உறவுகள்!,

ஐந்து அங்குலக்
கையடக்கத்
தடவல்
காலத்துத்
தகவல்களால்
கசந்துச்
சுத்தமாக
அற்றுப் போய்
சமூக இடைவெளிகளில்
சந்திக்கும் இடத்தில்
இன்று!,,,

**இரட்டைக்கரடு மு.இளங்கோவன்,**
**அந்தியூர்**

# வறுமையும் வலிமையும்

ஓலை குடிசைகள் ஒழுகும் மழைத்துளி
நிலவின் கருணை ஒளிரும்
விளக்கு
ஒட்டிய உடலோடு உலவும் குழந்தைகள்
கண்கள் குழிகளில் வீழ்ந்து
கிடக்கும்
இத்தனைக்கும் நடுவே முன்னேறும் துடிப்பில்
முயலும் ஏழைகள் இதயம்
மட்டும்
முடியும் என்று அடித்துக்
கொள்ளும்
உடலும் உள்ளமும் வலிமையில் மிளிரும்.
ஜெயகுமாரி கந்தவேள்

வறுமையும் வலிமையும்
வறுமையும் வலிமையும் வாழ்வில் உண்டு
பணமில்லா வறுமை இளமையில் கொடுமை
பக்குவமாய் உழைத்தே உயர்ந்திடல் வலிமை
பாசமில்லா உறவுகள் பாரினில் வறுமை
பண்போடு அனைவரையும் ஏற்றிடல் வலிமை
உண்மையில்லா உள்ளங்கள் உலகில் வறுமை
உறுதியாய் நின்றே கடந்திடல் வலிமை
தாய்மண் துறந்து வாழ்தல் வறுமை
உதவி செய்து உயர்த்துதல் வலிமை

**ஆதி தற்பரானந்தன்**

தாய்மை போற்று
ஐந்திரு மாதங்களாய் கருவினில்
சுமந்தே
உருவாய் அமை த்து அவனியில் ஈன்றவள்
உதிரத்தை உணவாய் உவகையுடன் ஊட்டியே
நடமாடும் தெய்வமாய் நடப்பிலே
காட்டுபவள்
தீதும் நன்மையும் வளர்ப்பிலே கற்பித்திடும்
தாய்மையின் தூய்மையைப் போற்றி வாழ்வோமே

**டாக்டர் ராமா வைத்தி**
**பிரான்ஸ**

# கவிஞர் தாழையாரின்
# கவிதைகளும் உலகக் கவிஞர்களும்



## தாழை உதயநேசன்

இயற்கையானது விந்தைத் தன்மை கொண்டது. மனிதசமூகம் அறிய முற்பட்டுத் தோற்றுப்போகும் உன்னதம் இயற்கை என்ற இரசியம். இலக்கியம் ஒன்றே அந்த இரகசியங்களை உலகிற்கு உணர்த்தும் கண்ணாடியாகத் திகழ்கிறது. இயற்கையின் அடிச்சுவடுகளைத் தனக்குள் உள்வாங்கி எழுதிய மேலைநாட்டு எழுத்தாளர்களாக வில்லியம் பிளேக், வில்லியம் வேர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, பைரன், கீட்ஸ் போன்றோரைக் காண்கின்றோம்.

நம் நாட்டு இலக்கியங்களில் பெரும்பாலானோர் இயற்கையை விதந்து போற்றும் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையில் கவிதைகள் படைத்துள்ளனர். அதேபோல், உலகமுத்தமிழ்க்கூட்டமைப்பின் நிறுவனர் தாழை.உதயநேசன் அவர்களின் கவிதைத் தொகுப்பு நூல்கள் அதற்குச் சான்றாக விளங்குகிறது.

'தமிழே விதையாய்' என்ற படைப்பில் "பாதை வழியே" என்ற கவிதை அழகான அழகியல் கவிதையாகும். அழகியல் கோட்பாட்டிற்கான சான்றும் ஆகும். அழகியலை மேலைநாட்டு அறிஞர்கள் பலர் வரையறை செய்துள்ளனர். அழகியல் அணுகுமுறைக் கோட்பாட்டில் முன்னோடியாகத் திகழும் இம்மானுவேல் காண்ட் என்ற அறிஞர் "புலனின்பமும் அழகும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், "அழகு என்பது தற்செயலான மற்றும் தனிப்பட்ட புலன் இன்ப நுகர்ச்சிகளைவிட மேன்மையானது. மனித அங்கீகாரத்தின் மீது உயர்வானதொரு உரிமையும் இதற்கு உண்டு. இந்த அழகை அனுபவிப்பது என்பது இயற்கையையும், இயற்கை வடிவத்திலுள்ள முறையையும் அறிதல் என்பதோடு உறவு கொண்டது" என்கிறார். மேலும், அழகியல் அணுகுமுறை 'சுயாதிக்கமானது' (Autonomy)

என்பதும் அவர் கருத்தாகும்.” எனத் தமிழ் இணையக் கல்விக்கழகம் விளக்கமளிக்கும். கவிஞர் தாழையாரின் கவிதையொன்றில்,

“கீழ்வானம் வெளுக்கிறது
புதுப்பாதைத் தெரிகிறது

ஆதவன் ஒளிக்கதிர்கள்
புதுவிடியல் தருகிறது

பசுமைக் காட்சிகள்
கண்முன்னே வந்தாட

செழிப்பான சிறுவயதும்
நெஞ்சுக்குள் குதிக்கிறது.”

என்கின்றார். மனித மனம் இயற்கையை நோக்கி பயணிக்கும் பொழுது மகிழ்ச்சியில் துள்ளாட்டம் போடுகிறது. இயற்கையும் மனித மனமும் இரண்டறக் கலக்கிறது. இக்கவிதையில் ஒவ்வொரு நாளின் துவக்கமான விடியலே பதிய வாழ்விற்கு தூண்டுகோலாக அமைகிறது என்பதை ஆசிரியர் கூறுகிறார்.

இயற்கையின் மடியில் தவழும் பொழுது இளம் பருவ நினைவுகள் நம்மில் எழுகிறது என்ற கருத்தை முன் வைக்கிறார் ஆசிரியர். மகிழ்வின் சாவி இயற்கையின் பாதையைப் பின்பற்ற மனிதனுக்கு கிடைக்கும் என்ற தத்துவத்தை உணர்ந்து மனிதசமுதாயம் பயன்பெறும் வகையில் அழகாகக் கூறுகிறார்.

இயற்கை, ஆதவன், சிறுவயது நினைவுகள் ஆகியவை ஓரே நேர்கோட்டில் பயணிப்பதை இக்கவிதையில் விளங்கிக் கொள்ளலாம்.. மேலும் அடுத்த வரியில் கவிஞர்,

‘மனதின் அலைகளில்
மனிதம் தேடுகிறேன்‘

அலைகளின் தொடக்கம் மற்றும் முடிவு அறிய முற்பட்டு மனிதம் என்ற உன்னத நிலை அறிய முற்படும் தேடலே இக்கவிதை. இக்கருத்தே மேலைநாட்டு எழுத்தாளரான வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் கவிதைகளில் மிளிர்கிறது என்பது விந்தையே.

’மனதின் துள்ளாட்டம்’ (My heart leaps up) என்ற கவிதைப் படைப்பில் இத்தகு விந்தையைக் காணமுடிகிறது.

‘வானத்தில் ஏழுவண்ணங்களை
காண்கையில் மனம் துள்ளாட்டம்
போடுகிறது.
என் வாழ்க்கை தொடங்குகிறது.
இப்போது நான் மனிதன் ஆனேன்‘.

என்கின்றார் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்.

மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள தொடர்புபற்றி இக்கவிதை விளக்கிக் கூறுகிறது. இயற்கையை நெருங்கும் பொழுதோ அதை உணரும்பொழுதோ நம்மை அறியாமல் ஓர் உன்னத நிலையை நாம் அடைகிறோம். அந்த உணர்வே மனிதனுக்கு நற்பண்புகளை விதைக்கிறது.

கவிதையின் ஆழமான கருத்தை ஒரு வரியில் ஆசிரியர் முத்தாய்ப்பாகக் கூறி முடிக்கிறார்.

(The Child is the father of man)

குழந்தையே மனிதனின் தந்தை குழந்தைப் பருவத்தில் எவற்றைக் கற்கிறோமோ அவைகளே நம் எதிர்கால வாழ்வில் பிரதிபலிக்கும்.

மகிழ்ச்சி என்ற அறிய பொக்கிஷம் இயற்கை என்ற சக்தி வழங்கி நம்மை வழிநடத்தும் என்ற கருத்தை வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் மற்றும் தாழையார் ஆகிய இருவரின் கவிதைகள் எடுத்து இயம்புகின்றன.

இரவின் மடியில் எனும் மற்றொரு கவிதையில்,

"சில்லென்ற காற்றில்
பனித்துளிகள் மோத

வெண்ணிலா ஒளியில்
வான்மகள் விழிக்க

மயக்கும் விழிகளில்
கனவிற்காக ஏங்க

கலைந்தோடும் மேகங்கள்
காதோரம் குளிரூட்ட

நினைவுகள் யாவும்
சிதறிடும் இரவில்

எந்தன் விழிகளோ
புது விடியல் தேடுதே ."

இக்கவிதையில் இரவின் ரீங்காரம் மற்றும் மனித மனத்தின் தன்மையை உற்றுநோக்கி உள்ளார் தாழையார்.

மனிதன் என்பவன் பொறுப்புகளைச் சுமந்து கொண்டு வாழ்க்கையைத் தொடர்கிறவன். இயற்கை, மனிதன் இரு வேறு பரிணாமங்கள் எனக் கவிதையின் ஆசிரியர் அழகான வரிகள் மூலம் இயம்புகிறார்.

இந்தச் சிந்தனையை அமெரிக்கா எழுத்தாளரான ராபர்ட் பிராஸ்ட் தனது கவிதையான (ஸ்டாப்பிங் பை தி வுட்ஸ் ஆன் எ ஸ்நோயி ஈவினிங்") எனும் கவிதையில் அற்புதமான வரிகளால் நம்மை வசியப்படுத்துகிறார்.

"யாருடைய பனித்துகள்கள் இவைகள்?
தெரிவது போல உணர்கிறேன்.
அவரின் வீடோ அருகே உள்ளகிராமத்தில்
நானோ இங்கு ஓய்வின் மடியில்
என்இருப்பை அவர் அறிய வாய்ப்பில்லை.

காடுகள் முழுவதும் பனித்துளிகளின் கைகள் படர்ந்துள்ளது.

என் இளமை ததும்பும்குதிரை பனிஉதிரும் காடுகளுக்கும்
சிலைகளை போன்ற ஆறுகளுக்கு
ஊடே உள்ள வீடுகளற்ற
இடத்தை கண்டு சற்றே குழம்பியது.

அதன் கழுத்தில் உள்ள மணிகள் அசைந்து தவறுகள் நேராமல் கவனமாக இருக்க வேண்டி கட்டளையிட்டது.

சூழலில்அமைதியும்
காற்றின் மொழியும்
பனிப்பொழிவின் ரீங்காரமும்
மட்டுமேஎங்கும் பிரதிபலித்தது.

பனிக்காடுகள் எங்கும் இருளில்
ஆழமான வனப்பு பரவியிருந்தது.

என் கடமைகள் என்னை பூர்த்தி செய்ய அழைக்கிறது.

உறக்கத்திற்கு முன்பாக,
நெடுந்தூரம் செல்லவேண்டும்
உறக்கத்திற்கு முன்பாக.
நெடுந்தூரம் செல்லவேண்டும்.

இக்கவிதை பனிக்காடுகளின் வழியே ஆசிரியர் பயணம் செய்த அனுபவத்தையும் இயற்கையின் சூழலும் மனிதனின்

பொறுப்புகளை அழகான வரிகள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

இவற்றின் மூலம் தழையாரின் உலகலாவிய சிந்தனையையும் மானிட வாழ்வின் கற்றலையும் அறிய முடிகிறது. ஐயா உதயநேசன் அவர்கள் கவிதைகள் மூலம் இயற்கையைப் போற்றும் வகையிலும் மனிதனின் கடமைகளையும் வரையறை செய்து எழுத்துகள் என்ற வண்ணத்துப்பூச்சியின் மூலம் உலக அளவில் சென்றடையும் என்பது உண்மையே. தாழையாரின் எண்ண ஓட்டங்களை ஒத்து உலகக் கவிஞர்களின் கவிதைகளும் செல்கின்றன என்கிறபொழுது மகிழ்ச்சி அடைகிறோம். தாழையார் கவிதைகள் சிந்தனையாலும், கற்பனையாலும் உலகத்தரத்தை எட்டி இருக்கின்றன என்பது ஆய்வு செய்யச் செய்ய விரிந்து செல்கிறது. அவற்றைத் தமிழ் உலகில் பதிவு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



**பேராசிரியர் மு விஜயகுமார்,**
**சென்னை.**

கவிஞர் தாழையாரின் கவிதை, சிறுகதை நூல்கள் அனைத்தும் கிடைக்குமிடம்:

## கலை உதயம் பதிப்பகம்

எண்: 10 முதல் தெரு. ராமபுரம்
ஆம்பூர் 635802
திருப்பத்தூர் மாவட்டம்

தொடர்பு எண்: 91596 98466

முத்தமிழ்நேசன் இதழின் ஆகஸ்டு மாத இதழ் (AUG–2023) சுதந்திரதினச் சிறப்பிதழாக வெளிவர இருக்கின்றது. அவ்விதழுக்கான படைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன. கவிதை, சிறுகதை, சுதந்திர வரலாறு, போராட்டத் தியாகிகள், துணுக்குகள் போன்றவற்றை எழுதி அனுப்பித் தாருங்கள்.



# சீவக சிந்தாமணியில் சைவம்

ஐம்பெரும் காப்பியங்களில் மூன்றாவதாகக் கருதப்படுவது சீவக சிந்தாமணி இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர். தமிழ் கண்ட துறவி புலவர்களுள் இவரும் ஒருவர். முதன் முதலில் எழுதப்பட்ட விருத்தக் காப்பியமான இதில் 3145 பாடல்களும், பதிமூன்று இலம்பங்களும் உள்ளன. இக்காப்பியத்தின் கதைத்தலைவன் சீவகன். இவன் எட்டுப் பெண்களை மணந்து கொண்ட கதையைக் கூறுகின்றது. முதன்முதலில் 1887 இல் இக்காப்பியம் அச்சேறியது. வடமொழி நூல்களான சத்திரிய சூடாமணி கத்திய சிந்தாமணி ஆகிய நூல்களிலும் ஸ்ரீபுராணம் மகா புராணம் எனும் இரு சமய புராணங்களிலும் சீவகன் கதை வருகிறது. இக்கதையைத் தழுவி எழுதப்பட்டதே சீவக சிந்தாமணி.

சீவகசிந்தாமணி அருகதேவன் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் முழுமையாகப் பெற்றிருக்கின்ற சமண காப்பியமாகத் திகழ்கிறது. இருப்பினும், கடவுள் வாழ்த்துப் பகுதியில், 'தேவாதி தேவன்,' 'ஒண்ணுதிச் செல்வன்' என்ற பொதுப் பெயர்களால் இறைவனைத் திருத்தக்கதேவர் குறிப்பிடுகின்றார். சமணக் காப்பியமான சிந்தாமணியில் ஆங்காங்கே சில இடங்களில் காப்பிய மாந்தர்களின் உருவ அழகையும் சிறப்பையும் கூறும் இடங்களில். சைவக் கடவுளான சிவனின் தோற்றப்பொலிவையும் புராணச் செய்திகளையும் உவமைகளாக எடுத்துரைத்துள்ளார். இவைக் குறித்து இக்கட்டுரை விளக்குகின்றது.

## சைவத்தின் தொன்மை

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயமாகும். இதுவே தமிழரின் பழம்பெரும் சமயம் என்பர் ஆராய்ச்சியாளர். ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில் சிவ வழிபாடு சிறப்புற்று இருந்தது எனத் தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் நிறுவியுள்ளனர். 'சிவ'

என்னும் சொல்லுக்குச் 'செம்மை' என்று பொருள். கடவுளைச் செம்பொருள் என்பது தமிழர் மரபு. சிவந்த மேனி உடையவர் சிவன். அவன் செக்கர் மேனி பெருமான், செம்மேனி எம்மான், பவளம் போல் மேனி என்றெல்லாம் கூறப்படுகின்றார்.

முழுமுதல் நூலான தொல்காப்பியத்தில் சிவபெருமான் குறிக்கப்படவில்லை. சிலப்பதிகாரம் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்றும், மணிமேகலை, 'நுதல் விழி நாட்டத்து இறையோன்' என்றும் புறநானூறு' கணிச்சி மணிமிடற்றோன்' 'நீலமணிமிடற்றன்' என்றும் சிவனைக் குறிப்பிடுகின்றது.

சிவனின் திருவுருவப்பொலிவு

இறைவனுடைய திருப்பெயர்கள் பல. அவன் உயிர்களை ஆட்கொள்ளும் திருவுருவம் பலவாகும்.' நானாவித உருவால் நமை ஆள்வான்' எனவே, அவனுடைய பெயரும் உருவும் இதுவென வரையறுத்து ஓதுதல் அரிது.. இறைவனுடையத் திருமேனியை உருவத் திருமேனி, அருவத்திருமேனி, அருவுருவத்திருமேனி என மூவகையாகக் கூறுவர். இவற்றுள், இறைவனது உருவத்திருமேனியினைச் சீவக சிந்தாமணி குறிப்பிடுகிறது.

## திருமார்பு

இறைவன் பொன்னிறமான அழகான மார்பினை உடையவன்.பொன்னின் நிறத்தைக் கொண்ட கொன்றை மலர் அணிந்தவன் என்பதை,

பொலங்கொள் கொன்றையி னான்' ( பா.32 )

என்று சிந்தாமணி பகர்ந்துள்ளது.

## பிறையணி

இறைவன் திருமுடிக்கண் உள்ள பொருள்களில்பிறைமதியும் ஒன்று.இதனைச் சிந்தாமணி,

'ஓடுமுகில் கீறியொளிர் திங்கள்சிகை வைத்தே' (பா.598)

'திங்கள் சேர் முடியினான்' ( பா. 1083 )

என்றெல்லாம் குறிப்பிடுகின்றது. இறைவன் பிறை அணிந்துள்ளமை தன்னைச் சரணடைந்தவர்களைத் தாங்கித் தாழ்வுநீக்கிப் பாதுகாக்கும் வள்ளல் என்பதை அறிவிக்கின்றது.

## கங்கையைத் தரித்தமை

இறைவன் திருமுடியில் கங்கையைத் தரித்துள்ளமையை,

'கொன்றையான் சடை போல் மின்னி' ( பா. 32 )

' வார்சடை ய வள்ளல்' ( பா. 598 )

புனல் சடை விரிந்திருக்கும் சுழலவிர் சூலத்தண்ணல் (பா.2105)

இறைவன் கங்கையைச் சூடியமை,அவனது பேராற்றலையும், வேகங்கெடுத்தாளும் வித்தகத்தையும் விளக்குகின்றது.

## பனித்த சடை

'மொய்சடை யொருவர்' (பா.1488)

' வார்சடை ய வள்ளல்' (பா.598)

என்பன சீவக சிந்தாமணியில் சடைபற்றி வரும் குறிப்புகள். ஞானியர் அடையாளம் சடைமுடி. எல்லாவற்றையும் முற்ற உணரும் பெருஞானியாக

விளங்குபவர் இறைவன். ஆன்மாக்களுக்கு ஞானம் அருளவேண்டிச் சடையைத் தரித்திருக்கின்றார்.



## புராணக் கூறுகள்

தேவர் முதலியோர் கூடித் திருப்பாற்கடலைக் கடைய முதலில் நஞ்சு தோன்றியது. அது எல்லோரையும் வருத்தச் சிவபெருமான் அந்த நஞ்சினை உண்டருளி உலகைக் காத்தான்.இப்புராணக்கருத்தைச் சிந்தாமணி,

'காரி உண்டிக் கடவுள்' ( பா. 670 )

என்று குறிப்பிடுகிறது.

## முப்புரம் எரித்தமை / மும்மதில் அழித்தமை

தாரகாசுரனின் மைந்தர்களான தாரகாட்சன், வித்யுன்மாலி, கமலாட்சன் என்னும் மூவரும் பிரமனை நோக்கிப் பெருந்தவம் புரிந்து பொன், வெள்ளி, இரும்பு கோட்டைகளைப் பெற்றனர்.இக்கோட்டைகளில் தங்கியிருந்துத் தேவர்களுக்குத் துன்பம் விளைவித்து வந்தனர். அவர்கள் சிவபெருமானை வேண்ட, மூன்று கோட்டைகளையும், மூன்று அசுரர்களையும் அழித்து, தேவர்களைக் காத்தருளினான்.இதனை,

'கடிமதின் மூன்று மெய்த கடவுள்' (பா.1087 )

'காலத்தீ நகரை மேயக் கடியரண் கடிந்த வம்பிற்

சாலத்தீச் சவரா்' ( பா.1141 )

அழல் அம்பெய்த கண்ணுதல் மூர்த்தி ( பா.2249 )

எனப் பல்வேறு இடங்களில் பதிவிடுகின்றார் திருத்தக்கத்தேவர்.

## உமையொருபாகன்

பிருங்கி முனிவர் ஒரு சமயம் திருக்கயிலைக்குச் சென்றார். அங்கே சிவபெருமானும் உமையம்மையும் ஒருங்கே எழுந்தருளியிருந்தனர்.பிருங்கி முனிவர் சிவபெருமானை மட்டும் வணங்கித் துதித்தார். உமாதேவியாரை நீக்கிச் சிவபெருமானை வணங்கி வலம் வந்து பணிந்தார், இது கண்ட அம்பிகை பெரும் கோபம் கொண்டு கண்ணுதலாளனாகிய சிவபெருமானை விட்டு நீங்கினாள்.பின்பு சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம்புரிந்தாள். அத்தவத்திற்கு உவந்த பெருமான், அம்பிகையைத் தம்மிற் பிரிவறத் தம்முடைய இடப் பாகத்தில் இடம் கொடுத்து என்றும் தம்முடன் ஒன்றியிருக்கும் நிலையில் மாதொருபாகனாக விளங்கினார். இப்புராணச் செய்தியைக் குறிப்பாக விளக்கும் வகையில்,

## முக்கட்

சினந்திகழ் விடையி னானுஞ் செல்வியுஞ் சேர்ந்த' ( பா.188 )

'கைம்மலர்க் காந்தள் வேலிக் கணமலை யரையன் மங்கை

மைம்மலர்க் கோதை பாகம் கொண்டதே மறுவ தாகக்

கொய்மலர்க் கொன்றை மாலைக் குளிர்மதிக் கண்ணி யான்' ( பா.208 )

'திங்கள்சேர் முடியு னானுஞ் செல்வியும்' ( பா.1083 )

என்ற பாடல்வரிகள் அமைந்துள்ளன. உலகில் சில மதங்கள் கடவுளை ஆணாக வைத்துப் போற்றுகின்றன மற்றும் சில மதங்கள் கடவுளைப் பெண்ணாக வைத்துப் போற்றுகின்றன. ஆனால் தமிழர்கள் தொன்றுதொட்டே கடவுளைத் தனியே ஆணாகவோ, பெண்ணாகவோ கருதாமல் இருகூறும் இயைந்த நிலையில் இனிது வழிபட்டு வருவது நினைக்கத் தக்கது.

## முக்கண்

இறைவன் முக்கண்களை உடையவன். நுதலிடத்து ஒரு விழிப் பெற்றவன். இதனை,

' முக்கட் சினந்திகழ் விடையினான்' (பா.188 )

' கனையெரி யழலம் பெய்த

கண்ணுதல் மூர்த்தி ' ( பா.2249 )

என்ற சிந்தாமணித் தொடர்களால் அறியலாம்.

சீவக சிந்தாமணி சமணசமய காப்பியமாக இருந்த போதிலும் பல சமயக் கருத்துக்களையும் காப்பியத்தில் இழையோட விட்டிருக்கின்றார் திருத்தக்கதேவர். இக்காப்பியத்தில் சமணம் அல்லாத பிற சமயங்களாகிய சைவம், வைணவம், சௌரம் என்ற மூன்று சமயக் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. இதில் சைவ சமய முழுமுதற்கடவுளான சிவபெருமான் மூன்று கண்களை உடையவர்; நெற்றியில் இமையா நாட்டம் உடையவர்; மலையை வில்லாக வளைத்துப் பாம்பை நாணாகப் பூட்டி மூன்று அரக்கர்களை அழித்து அமரர்க்கு உதவியவர்;இடபக் கொடியை வலத்தில் உயர்த்தியவர். கருணை உடையவர்;விரிந்த சடையினர்;உமையை இடபாகமாகக் கொண்டவர்; மார்பில் கொன்றை மாலையை அணிந்தவர் அவர் காளையை வாகனமாகக் கொண்டவர்; இளம்பிறையை தலையில் சூடியவர் போன்ற சைவ சமயச் செய்திகளைச் சீவக சிந்தாமணி குறித்துள்ளது.இவை போன்று சைவ சமய கருத்துக்கள் இன்னும் சீவகசிந்தாமணியில் ஆங்காங்கே சொல்லப்பட்டுள்ளன.



*முனைவர் ஜா.திரிபுர சூடாமணி*

## வருடிக்கொண்டே இமைக்கிறேன்

கூடவே தானே இருந்தது
எங்கே குட்டிக்கரணத்துக்கு
பழகியது

பொய் சொல்லுதோ கண்ணாடி
மெய் தேடும் முகத்தில்
வெண் சாமர மியாவ்

வருந்துவது ரசிப்பது
சிந்திப்பது தாண்டி
வருடிக்கொண்டே இமைக்கிறேன்

பார்க்கப் பார்க்க
பதுங்கிய இளமை
பாய்ந்தோடி போயே போச்சு

தாடியைப்  பூனைக்கு ஒப்பிடுகிறேன்

எந்த பூனையையும்
நாற்பது
வெண்மை ஆக்கி விடுகிறது



**கவிஜி**

## இளம் கைம்பெண்

இனிக்கும் இளமை எழில்நிறை பெண்மை
முத்துப்பல் வெண்மை முகமோ அருமை
கருவிழிகள் தீட்ட மறந்தன கண்மை
சங்குக் கழுத்தும் , நெற்றியும் வெறுமை
இல்லை அவள் வாழ்வில் இனிமை
ஏனோ அவளுக்கிந்த துன்ப நிலைமை!
எல்லாம் காலத்தின் பெருங் கொடுமை
இகழ்வது சிறுமை ஏற்பதே பெருமை
மனமுவந்து மணம் புரிவதே பேராண்மை
செய்ய முயல்வீரோ இந்தப் புதுமை ?

**சு.அமுதமணி கல்யாணசுந்தரம்,**
**நந்திவரம்.**

## மௌனமொழி

ஆழ்ந்த துக்கத்தையும்
அதிக சந்தோசத்தையும்
நிறைந்த சிந்தனையையும்
நிம்மதியாய்ப் பெருமூச்சையும்
கலக்கத்தின் வாட்டத்தையும்
காதலின் தாக்கத்தையும்
அமைதியாய் வார்த்தைகளின்றி
அறிவித்திடுமே மௌனமொழி

**பானுமதி இராஜேந்திரன்,**
**திருநெல்வேலி**

கதிரவனின் காதலி
கிழக்கு வெளுக்க
கீழ்வானம் சிவக்க
கதிரவனின் காதலி
கமலம் மலர்ந்தாள்
உதயத்தின் ஒளியில்
உள்ளம் மகிழ்ந்தாள்
நெஞ்சில் பூத்தாள்
நினைவில் நின்றாள்
கொஞ்சம் மொழியாள்
தென்றலாய்த் தழுவினாள்

**ராமசுப்பிரமணியன் என்ற**
**கவிஞர் இராசு மணி**

## *சாமரம் வீசிடும் பச்சைப் பயிர்கள்*

சாமரம் வீசிடும் பச்சைப் பயிர்கள்
தரணியில் இறைவன் தந்த கொடையே
சமயம் பார்த்துக் கிளைகளை வெட்டி
மரங்களை அழித்து மனிதன் செய்யும்
மகாபாவம் நாளை அவனுக்கே
தீமையாகும்
அறிந்தும் அறியா மானிடவர்க்கம்
மண்ணையழித்து
விண்ணை நாடும் வினோதம் என்ன?
பயிர்களே என்றும் உயிர்களின் ஆதாரம்.

**கலாமலர் கதிர்காமநாதன்**
**கனடா**

## *முதுமை என்றும் வரமே*

தாரமாய் வந்தவள்
தரமாய் நடந்ததால்
தடம்புரளாது
இனிமையாய்ச் சென்றதே
வாழ்க்கை
துணையாய் வந்தவன்
இணையாய்த் தோள்
கொடுத்ததால் பிரியா
தண்டவாளமாய்ச் சென்றதே
உழைத்துக் களைத்தாலும்
உதிரச் சொந்தங்கள்
உதரிப் போனாலும்
கடைசிவரைத்
தோள்கொடுக்க
நானிருப்பேன்
வாஞ்சையாய்க்
கைப்பிடித்து அழைத்துச்
செல்கிறாளே துணைவியென்ற
மனைவி முழுமை
பெற்ற முதுமை
என்றும் வரமே

**ரேணு பாலு**

## *முதுமை என்றும் வரமே*

அனுபவம் நிறைந்த அற்புதமான புத்தகமே
உடலில் முதிர்ச்சி மனதில் எழுச்சியே
அன்பு என்ற அமிர்தத்தை ஊட்டுபவர்களே
முதியவர்கள் நல்ல அறிவுரைகளைப்
போதிப்பவர்களே
அறுவடைக்கு காத்திருக்கும் நெற்கதிர்
போன்றதே
காலத்தால் இன்று பழமைப்பட்டு
போனாலுமே
காலத்தோடு முன்னேறிச் செல்ல
வழிகாட்டியவர்களே
தாங்கிப் பிடிக்கத் துணையிருந்தால்
சொர்க்கமே
முதுமை என்றும் அழகிய வரமே

**ஷாமினி தவசீலன்**
**பிரித்தானியா**

## *புன்னகை*

கோடிகளில் புரள்பவரும்
கொண்டிராத மகிழ்வு/
தெருக்கோடியின் தேவதையின்
தெளிவான புன்னகையில்./
அன்னமின்றி அடிவயிறு
அல்லலுற்ற போதிலும்/
மூடி மறைத்தனளே
மேனியையும், வறுமையையும்/

**க.தமிழ்ச்செல்வன்**

சீவியே சிங்காரிச்சிக்கீனு
ஒய்யாரமாக காட்டுபவளே
பட்டுச்சீலையில பளபளன்னு
சொலித்து நிற்பவளே
ரவிக்கையும் மாமனச்
சுண்டியே இழுக்குதே
தங்கத்துல நகைகள்
தளதளன்னு மின்னுதே
கக்கத்துல இடிக்கிக்கவே
அக்கத்துல வந்தாலே
வெக்கத்துல ஒதுங்கியே
வாளமீனா வழுக்குறியே
பக்கத்துல யாருமில்ல
கிட்டக்கவே வாயேன்டி
மோகத்துல ஏங்கியே
தாகத்துல தவிக்கிறேனே
ஆசையோட அள்ளியே
அணைச்சிக்கடி கள்ளியே
இஞ்சியிடுப்பத்
தழுவியே மகிழ்ச்சியாக்
கொஞ்சிக்கலான்டி

**மு. மங்கையர்க்கரசி**

**அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழும நிறுவனங்கள்**
**இணைந்து நடத்தும் உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பில்**

# உலகத் தமிழ் மாநாடு 2023

**நாள் : அக்டோபர்–21,22 (சென்னை)**
**அக்டோபர்– 28,29 ( இலங்கை)**

## தலைப்பு:

## தலைமுறைகளைக் கட்டமைக்கும் தமிழர் மாண்பு

அன்பார்ந்த தமிழ் உறவுகளுக்கு வணக்கம்.

உலகின் திசைகளைத் தமிழால் இணைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள பன்னாட்டுத் தமிழ் இயக்கமான “உலக முத்தமிழ்க் கூட்டமைப்பு” தமிழ் – தமிழர் மேம்பாடு – தமிழ்ப்படைப்பாளர்களை அங்கீகரித்தல் என்னும் இலக்குடன் செயலாற்றி வருகின்றது. அமெரிக்காவை மையமாக வைத்து உலகெங்கும் சிறகுகளை விரித்திருக்கும் இம்முத்தமிழ்க்கூட்டமைப்பு, பன்னாட்டுத் தமிழன்பர்களை இணைத்திடும் இலட்சியத்துடன் இந்தியா – இலங்கை ஆகிய நாடுகளில் உலகத் தமிழ் மாநாடுகளை எதிர்வரும் அக்டோபர் (2023) திங்களில் நிகழ்த்திட விழைந்துள்ளது.

இயல்–இசை–நாடகத்தமிழின் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளுடன், ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கும் வகையில் அரங்கங்கள் அமைக்கப்படவுள்ளன. பன்னாட்டுப் பேராளர்களால் வாசிக்கப்படும் கட்டுரைகளின் தொகுப்பாக ஆய்வு மலரும் வெளியிடப்படவுள்ளது. எக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள தமிழரின் மாண்பினை மையப்பொருளாகக் கொண்டு இம்மாநாட்டு ஆய்வுத்தலைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்பும் பேராளர்களுக்காக இங்கே சில தலைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### தலைப்புகள்:

1. சங்கத்தமிழரின் மாண்பு நிறை வாழ்வு
2. இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைத்தமிழரின் அறிவு சார் வெளிப்பாடு
3. செவ்வியல் பனுவல்கள் புலப்படுத்தும் அறம்
4. அறவிலக்கியங்கள் உணர்த்தும் தமிழர் நெறி
5. தமிழ்க்காப்பியங்கள் காட்டும் தலைமை மாண்புகள்
6. பக்தி இலக்கியங்கள் பேசும் பெருவாழ்வு

7. சிற்றிலக்கியங்களில் செந்தமிழர் வாழ்வியல்

8. இலக்கியங்கள் காட்டும் தமிழரின் உளவியல் நோக்கு

9. தமிழ்க்கலைகள் உணர்த்தும் தகைசால் வாழ்வு

10. தமிழ் இலக்கியம் கட்டமைத்த மனிதவள மேம்பாடும் ஆளுமைத்திறன்களும்

11. கிராமப்புற நிகழ்கலைகளும் மாற்றங்களும்

12. தமிழ்நாடகவியலின் வளர்ச்சிப் போக்குகள்

13. தமிழிசை வளர்ச்சி வரலாறும் செல்நெறியும்

14. மகாகவி பாரதியாரின் படைப்புகளில் கல்விச்சிந்தனைகள்

15. பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகள் புலப்படுத்தும் தமிழர் வாழ்வியல்

16. தமிழில் மொழிபெயர்ப்பு இலக்கியங்களின் வளர்ச்சியும் போக்கும்

17. புலம் பெயர்ந்த தமிழர் வாழ்வியலும் தமிழர் சால்பும்

18. நவீன இலக்கியப் படைப்புகளில் நெறிசார் வாழ்வியல்

19. கணினித்தமிழின் அகப்புற வளர்ச்சிப்போக்குகள்

20. இத்தலைப்புகள்மட்டுமின்றிமாநாட்டுமையப்பொருண்மையான “தலைமுறைகளைக் கட்டமைக்கும் தமிழர் மாண்பு” என்னும் தலைப்புடன் தொடர்புடைய பிற தலைப்புகளிலும் கட்டுரைகள் அமையலாம்.

21. கட்டுரைகளை worldtamilconference 2023 @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

22. கட்டுரையாளர்களின் கவனத்திற்கு :

23. அனைத்துத்துறைகளைச் சார்ந்த பல்கலைக்கழகம் /கல்லூரி/பள்ளிகளைச் சேர்ந்த கல்வியாளர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

24. ஆய்வுக்கட்டுரைகளைச் சொற்கோப்பில் (word document) பு4 தாளில் 1.15 இடைவெளியுடன் ஏரியல் யூனிகோட் (Arial Unicode) எழுத்துருவில் 6 பக்கங்களுக்கு மிகாமல் கணினிவழித் தட்டச்சு செய்து worldtamilconference 2023 @gmail.com என்ற மின்ன்ஞ்சல் முகவரிக்கு 30.07.2023 ஆம் தேதிக்குள் அனுப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

25. ஆய்வுக்கட்டுரைகள் எழுதுபவர்களின் சொந்த முயற்சியில் உருவானதாகவும், புதிய மற்றும் அசல் கண்டெடுப்புகளாகவும் இருத்தல் வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வுமுறைப்படி அமைவதுடன், அடிக்குறிப்புகள் மற்றும் துணைநூற்பட்டியல் ஆகியவற்றுடன் இடம் பெறுதல் முக்கியமாகும்.

26. ஆய்வு முறைமையுடன் எழுதப்பட்ட கட்டுரைகள் மட்டுமே நூலாக்கம் பெறும், தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரையாளர்களிடமிருந்து நூலாக்கத்திற்காக ரூ.500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) கட்டணம் பெறப்படும்.

27. வெளிநாடு வாழ் ஆய்வாளர்கள் இணைய வாயிலாகவும் மாநாட்டில் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க வசதிகள் உருவாக்கித் தரப்படும்.

28. தேர்வு செய்யப்பட்டும் கட்டுரைகள் ஹுறீயஹி எண்ணுடன் உலக முத்தமிழ்க் கூட்டமைப்பு பதிப்பாக வெளியிடப்படும்.

29. இந்தியா,-இலங்கை - இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வாழும் கட்டுரையாளர்கள் அந்தந்த நாடுகளில் நிக்ழும் மாநாட்டு அரங்குகளில் நேரடியாகப் பங்கேற்றுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்

30. கட்டுரையாளர்களுக்கு மாநாட்டில் பங்கேற்றமைக்கான/ ஆய்வுத்தாள் சமர்ப்பித்தமைக்கான சான்றிதழ் மற்றும் நூல் வழங்கப்படும்.

## மாநாட்டுப் புரவலர்:

தமிழ்மாமணி முனைவர் **தாழை இரா. உதயநேசன்**

(நிறுவனர்/ தலைவர் - அமெரிக்கா முத்தமிழ்க் கூட்டமைப்பு

நிறுவனர் - அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்கள்)

## மாநாட்டு முதன்மை ஆலோசகர்கள்

மதிப்புறு முனைவர் அமுதபாரதி

மதிப்புறு முனைவர் கவிச்சுடர் க.நா.கல்யாணசுந்தரம்

மதிப்புறு முணைவர் கவிமாமணி ஆரூர் தமிழ்நாடன்

முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன்

மதிப்புறு முனைவர் கலைமாமணி கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி

முனைவர் செ.சு.நா. சந்திரசேகரன்

இயக்குநர் திரு. யார் கண்ணன்

மதிப்புறு முனைவர் டி.கே.எஸ். கலைவாணன்

முனைவர் மோ.பாட்டழகன்

முனைவர் ரவி கோவிந்தராஜ்

பாடகர் திரு. வேல்முருகன்

மதிப்புறு முனைவர் கவிமாமணி வெற்றிப்பேரொளி

## பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர்கள்

கவிஞர் திருமகள் சிறிபத்மநாதன், இங்கிலாந்து .

திரு. எஸ். பிரதீஸ்குமார், இங்கிலாந்து

திரு. எம். இரமேஷ்வரன் – கம்போடியா

பன்னாட்டுத் துணை ஒருங்கிணைப்பாளர்கள்

திருமதி நகுலா சிவநாதன். ஜெர்மனி

திரு. ரியாஸ் முகமது. இலங்கை

திருமதி ந. தாமரைச்செல்வி – இலங்கை

## மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினர்கள்

மதிப்புறு முனைவர் உமாபாரதி

முனைவர் ஓசூர் மணிமேகலை

திருமதி மோகனா கோபாலகிருஷ்ணன்

திருமதி ரமணி மாடசாமி

முனைவர் இரா.செந்தில்குமார்

முனைவர் ஞா.விஜயகுமாரி

திருமதி சுகுணா சுதாகரன்

### வங்கி விவரம்

Name : Udhayanesan Raji

Bank Name : ICICI Bank

A/C No : 156501075002

IFSC code : ICIC0001565

Branch : Ambur

Cell : 9159698466 (G pay)

## தொடர்புக்கு :

முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன் - 9629662507

முனைவர் ஜோ.சம்பத்குமார் - 9976025731

முனைவர் செ.சு.நா. சந்திரசேகரன் - 9283275782

செல்வி எம்.மேரிமுத்து - 9159698466 (கட்டணம் & நிதி விசாரணை மட்டும்)

## அழைப்பின் மகிழ்வில்

தமிழ்மாமணி முனைவர் தாழை இரா. உதயநேசன்
நிறுவனர்– தலைவர்.

முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன்
பொதுச்செயலாளர்.


AMIP - USA
அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவை
AMU - USA
WORLD MUTAMIL FEDERATION,INC.USA
பகுத்தறிவுப் பாசறையே
பார்போற்றும் சூரியனே
திராவிடக் கனலே
தீரம் மிகுந்தவனே
கவிதைக்குத் தலைமகனே
காகிதத்தில் திளைத்தவனே
இளையோரின் எழுச்சியே
இக்காலப் பெரியாரே...
விருதிற்கே பெருமை சேர்த்தீர்...!
வைரமுத்து
@Vairamuthu
ஜூலை 13
என் பிறந்தநாளை முன்வைத்து
ஒவ்வோராண்டும்
வழங்கப்படும்
'கவிஞர்கள் திருநாள்'
விருதினை
இவ்வாண்டு பெறுகிறார்
கவிஞர் ஆரூர் தமிழ்நாடன்
கவிஞர்
பத்திரிகையாளர் என்று
பன்முகம் கொண்டவர்க்கு
விருது வழங்குவதில்
வெற்றித் தமிழர் பேரவை
களிப்புறுகிறது
நம் தலைமுறையை
நாம் வளர்ப்போம்
Translate Tweet
8:00 AM · 04 Jul 23 · 225 Views
வாழ்த்துகளுடன்..
தமிழ்மாமணி தாழை இரா. உதயநேசன்,
நிறுவுநர் - அமெரிக்க முத்தமிழ்
இலக்கியப் பேரவைக் குழுமங்கள்

# அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை

புதிய எழுத்தாளர்களின் எண்ணப் போக்கை / கவித்துவத்தை/ கதை புனையும் ஆற்றலை/ செய்தி வெளிபாடுகளை நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். புதியன படைக்கும் ஆர்வமிக்க எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்களின் இலக்கியப் பங்களிப்பை வெளிஉலகத்திற்குக் கொண்டு சென்று பெருமைப்படுத்துவதற்கும், இலக்கியத்தை வளர்ப்பதற்கும் நாங்கள் காத்திருக்கின்றோம். எழுத்தாளர்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து தமிழுக்குப் புதுஊக்கம் தர முயற்சிக்கின்றோம்.

இணைந்து செயலாற்றக் கீழ்கண்ட குழுமங்களாய் அழைக்கின்றோம்

- அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் தொலைக்காட்சி
- அமெரிக்க முத்தமிழ் சிறுவர் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் நூல் ஆய்வுப் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் ஹைக்கூப் பேரவை
- கலை உதயம் பதிப்பகம்
- அமெரிக்க முத்தமிழ் ஆசிரியர் பேரவை
- முத்தமிழ் நேசன் - இலக்கிய இதழ்

தமிழ்மாமணி முனைவர் இரா.உதயநேசன் அவர்கள் எழுதிய நூல்கள் அனைத்தும் கிடைக்குமிடம்:


கலை உதயம் பதிப்பகம்

எண்: 10, முதல் தெரு, ஸ்ரீ ராமாபுரம்

ஆம்பூர் 635802

திருப்பத்தூர் மாவட்டம்

போன் 9159698466